<u>கொடைக்கானல் நகராட்சி</u>

2021ம் ஆண்டு ஜுன் மாதம் 30 ஆம் நாள் (30.06.2021) புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

முன்னிலை: த. நாராயணன், பி.எஸ்.சி., எம்.பி.ஏ.,
தனி அலுவலர்.

1) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான மாவட்ட ஆட்சித் தலைவர் தங்கும் பார்க் வியு பங்களா கட்டிடமானது மழையின் காரணமாக சேதமடைந்து பழுதடைந்துள்ளது. எனவே, மேற்படி கட்டிடத்தினை மராமத்து செய்து புதுப்பிப்பதற்கு ரூ.9.98 இலட்சத்தில் (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணித்தி எட்டாயிரம் மட்டும்) பொது நிதியின் கீழ் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டின்படி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1048, நாள். 30.06.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) கொடைக்கானல் நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அரசு வழிகாட்டுதலின்படி, கொடைக்கானலுக்கு வரும் நபர்கள் இ–பதிவு முறையில் வரவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதில் இதற்கான விழிப்புணர்வினை பொது மக்களுக்கும், வெளியூரிலிருந்து கொடைக்கானலுக்கு வரும் மக்களுக்கும் ஏற்படுத்தும் வகையில் மூஞ்சிக்கல், வட்டகானல் ரோடு, கலையரங்கம், பிரையண்ட் பார்க் மற்றும் பாம்பார்புரம் ஜங்சன் என 5 இடங்களில் இ–பதிவு வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வு பதாகைகள் உடனடியாக நிறுவப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்திய வகையில் செலவினத் தொகை ரூ.11,500/– இந்நகராட்சி சுகாதார ஆய்வாளர் திரு.பா.பாண்டிச்செல்வம் அவர்களால் செலவிடப்பட்டு பட்டியல் சமர்ப்பித்துள்ளார். பட்டியலின்படி தொகை ரூ.11,500/– யை சுகாதார ஆய்வாளர் திரு.பா.பாண்டிச்செல்வம் அவர்களுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அவசர அவசியம் கருதி கொரோனா தடுப்பு நடவடிக்கையின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட இச்செலவினத்தினை அன்னாருக்கு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1049, நாள். 30.06.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3) திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.2814/அ3/2018, நாள்.27.4.21ன்படி ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அங்கன்வாடி மையங்கள் உட்கட்டமைப்பு வசதிகளை தரம் உயர்த்திட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நகராட்சியின் பெயர் | அங்கன்வாடி மையத்தின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|---|
| 1. | கொடைக்கானல் | ஜி.எச்.மையம் | 2,00,000 |
| 2. | | சீனிவாசபுரம் மையம் | 2,00,000 |
| 3. | | மொத்தம் | 4,00,000 |

அதன்படி இப்பணிகளை மேற்கொள்வதற்கு 1.6.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | ஜி.எச்.அங்கன்வாடி மையத்தில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 2.00 | ஆர்.அங்கப்பன்<br>எஸ்.வி.இராணித் தங்கம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.57% குறைவு<br>1.28% குறைவு |
| 2. | சீனிவாசபுரம் அங்கன்வாடி மையத்தில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 2.00 | ஆர்.அங்கப்பன்<br>எஸ்.வி.இராணித் தங்கம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.54% குறைவு<br>1.42% குறைவு |

அலுவலக குறிப்பு. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1050, நாள். 30.06.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் DM சொலுசன் நிறுவனம் மூலம் 01.02.2021 முதல் நகர் பகுதிகளில் சேகரமாகும் ஒருங்கு குப்பைகள் (mised weste) மற்றும் வீடு வாரியாக பிரித்து வாங்கப்படும் மக்கும் குப்பைகளை செயலாக்கம் செய்யப்பட்டு மக்கா குப்பைகளை RDF சிமின்ட் ஆலைக்கு எரிபொருளாகவும், மக்கும் குப்பைகளை Sewere இயந்திரம் மூலம் அரைக்கப்பட்டு உரமாக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இப்பணிகளில் கடந்த 5 மாதங்களாக குப்பைகள் தேங்காமல் குப்பைகள் அற்ற உரக்கிடங்காக மாற்றம் பெற்று வருகிறது.

மேலும், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந்நகராட்சியினை குப்பைகள் அற்ற நகராட்சியாக (Garbage Free City) மாற்றும் பணிக்கு மேற்கண்ட பணி முக்கியத்துவமான பணியாக இருப்பதாலும், துப்புரவு ஆய்வர் தன்னுடைய குறிப்பில் மேற்கண்ட பணியானது நல்ல முறையில் நடை பெற்று வருவதாகவும், இப்பணியானது தொடர்ந்து நடைபெற வேண்டுமென குறிப்பில் தெரிவித்துள்ளார்கள். எனவே, திடக்கழிவு மேலாண்மை விதியின்படி அவசரம் அவசியம் கருதி மேற்கண்ட பணியினை மேலும் 6 மாதங்களுக்கு DM சொலுசன் நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு வழங்குவதற்கும் அதற்கான செலவினம் ரூ.25,00,000/– (ரூபாய் இருபத்தி ஐந்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.154/2021/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1051, நாள். 30.06.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணிக்கு குப்பைகள் அகற்ற பயன்படுத்தப்பட்டு வரும் TN 57 W 9634, TN 57 W 9357, TN 57 W 4937 மற்றும் TN 57 AU 3416 ஆகிய நான்கு லாரிகளுக்கு புதிதாக வாகனம் ஒன்றிற்கு 6 டயர்கள் வீதம் 24 டயர்கள் வாங்குவதற்கு MRF திண்டுக்கல் கிளை அலுவலகத்திலிருந்து 25.02.2021 தேதிய 24 டயர்களுக்கு ரூ.2,29,892/– விலைப்புள்ளி பெறப்பட்டு கோப்பு செயலாக்கத்தில் இருந்த நிலையில் சட்டமன்ற பொதுத் தேர்தல் நன்னடத்தை விதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுவிட்டதால் டயர்கள் வாங்கப்படவில்லை. தற்சமயம் தேர்தல் நன்னடத்தை விதிகள் முடிவுற்ற நிலையில் டயர்களின் விலை திருத்தியமைக்கப்பட்ட நிலையில் 15.06.2021ம் தேதிய MRF நிறுவனத்தின் விலைப்புள்ளி தொகை 24 டயர்களுக்கு GST உட்பட ரூ.2,41,437/– வரப்பட்டுள்ளது. எனவே, கூடுதல் செலவினத்தை ரூ.11,545/–க்கு (ரூபாய் பதினோராயிரத்து ஐநூற்றி நாற்பத்தி ஐந்து மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. துப்புரவுப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1052, நாள். 30.06.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

6) பொது சுகாதாரம் வாகனம் TN 57 BU 3253, TN 57 BU 3224, TN 57 BU 3280, TN 57 BU 3252, TN 57 BU 3216, TN 57 BU 3265, TN 57 BU 3232, TN 57 BU 3276, 8 டாடா ஏசிஇ வாகனங்களுக்கு ஒவ்வொரு வாகனங்களுக்கு நான்கு டயர்கள் வீதம் 32 டயர்கள் வாங்கிக் கொள்வதற்கு MRF டயர் டிவிசன் அலுவலகம் திண்டுக்கல் நிறுவனத்திற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் விலைப்புள்ளி தொகை ரூ.81,160/– (ரூபாய் எண்பத்தி ஓராயிரத்து நூற்றி அறுபது மட்டும்) விலைப்புள்ளி வரப்பட்டுள்ளது. மேற்கண்ட MRF நிறுவனத்திடமிருந்து 32 டயர்கள் வாங்கிக் கொள்வதற்கும் மேற்கண்ட செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1053, நாள். 30.06.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

7) கொடைக்கானல் நகராட்சி அண்ணாசாலை KAS Shoping Complex அருகில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் திரு.அமுதவள்ளி, க/பெ. கார்த்திகேயன் என்பவரால் அனுமதிக்கு மாறாக STD Booth அமைத்து ஆக்கிரமிப்பு செய்ததை நகராட்சியால் ஆக்கிரமிப்பை அகற்றப்பட்டது தொடர்பாக நகராட்சிக்கு எதிராக வழக்கு எண். WP(MD)No.6057 of 2013 –ன் மூலம் வழக்கு தொடரப்பட்டு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு நடைபெற்று வருகிறது. இவ்வழக்கினை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் இந்நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.T.S.முகமது முகைதீன் அவர்களால் நகராட்சி சார்பாக நடத்தப்பட்டு வருகிறது. மேற்படி வழக்கறிஞரின் 23.06.2021ம் தேதிய கடிதத்தில் வழக்கு கட்டணமாக ரூ.10,000/–ம் தொகை வழங்கக்கோரி பட்டியல் கடிதம் அனுப்பியுள்ளார். இவ்வழக்குக்கான கட்டணத்தை நகராட்சி நிலை வழக்கறிஞருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வழக்கு எண் | பெயர் |
|---|---|---|
| 1. | WP(MD)No. 6057 of 2013 | கே.அமுதவள்ளி, க/பெ. கார்த்திகேயன் |

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். (ந.க.எண்.904/2021/எப்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1054, நாள். 30.06.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

8) கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN 57 W 9357 க்கு கடந்த 29.07.2020ல் காப்பீடு தொகை ரூ.35,243/– செலுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட வாகனத்திற்கு 2021ம் வருடத்திற்கு காப்பீடு தொகை செலுத்துவதற்கு 29.07.2021ம் தேதி முடிவடைவதால் கீழ்கண்ட விபரப்படி காப்பீடு தொகை செலுத்தக் கோரி பட்டியல் வரப்பட்டுள்ளது.

| Policy No | Renewal due on date | Vehicle No | Renewal Premium Rs. |
|---|---|---|---|
| 730100/31/20/01/4650 | 29.07.2021 | TN 57 W 9357 | 34,625/– |
| | | மொத்தம் ரூ. | 34,625/– |

மேற்கண்ட விபரப்படி TN 57 W 9357 வாகனத்திற்கு 2021ம் ஆண்டிற்கு காப்பீடு தொகை ரூ.34,625/–ஐ தி நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிட்., மதுரை நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு அதற்கான செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2371/2019/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1055, நாள். 30.06.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

9) கொடைக்கானல் நகராட்சியில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு அறிவிப்பினை தடைசெய்யப்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் (Contonment zone) பகுதியில் ஒலிபெருக்கி அமைத்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு செய்திட நாள் ஒன்றுக்கு ரூ. 1000/– க்கு விலைப்பட்டியல் பெறப்பட்டுள்ளது. அதன்படி, தடைசெய்யப்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் (Contonment zone) பகுதியில் ஒலிபெருக்கி அமைத்து 31.7.2020 முதல் 14.8.2020 வரை விளம்பரம் செய்திட்ட வகையில் பட்டியல் தொகை ரூ. 69,000/– வழஙகிட கோரி பட்டியல் பெறப்பட்டுள்ளது.

1. பாக்கியபுரம் 15 நாட்கள்
2. பெர்ன்உறில் ரோடு 15 நாட்கள்
3. அண்ணாநகர் 15 நாட்கள்
4. இந்திரா நகர் 15 நாட்கள்
5. சீனிவாசபுரம் 9 நாட்கள்

எனவே, பட்டியலின்படி தொகை ரூ. 69,000/–யை இசைராணி ஆடியோஸ் நிறுவனத்திற்கு வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் அரசால் கொரோனா வைரஸ் தடுப்பு நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1056, நாள். 30.06.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

10) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN 57 W 0091 ன் சாலை வரி மற்றும் தகுதிச் சான்று பெற்ற வகையில் செலவினம் தொகை ரூ.11,130/–யை கிழ்க்கண்ட விவரப்படி இந்நகராட்சி சுகாதார ஆய்வாளர் திரு.வே.சுப்பையா அவர்களால் செலுத்தப்பட்டு பட்டியல் சமர்ப்பித்துள்ளார்.

நேசனல் இன்சூரன்ஸ் காப்பீடு எண்.640800312110000633, நாள்.25.6.2021 ரூ.10,130.00

பசுமை வரி ரசீது எண்.TN210629v7458274/ TN210629c4534785, நாள்.29.6.2021 ரூ. 1,000.00

எனவே, செலவினத் தொகை ரூ.11130/–யை இந்நகராட்சி சுகாதார ஆய்வாளர் திரு.வே.சுப்பையா அவர்களுக்கு பொது நிதியின் மூலம் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1057, நாள். 30.06.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

11) இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா தடுப்பு பணிக்கு தேவையான கீழ்க்கண்ட கிருமி நாசினிகள் மற்றும் பாதுகாப்பு கவசங்கள் இருப்பு குறைவாக உள்ளது. மேலும், தற்போது தென் மேற்கு பருவமழை துவங்கியுள்ள நிலையில் நகர் பகுதியில் தினசரி கிருமி நாசினி தெளிக்க வேண்டியுள்ளதாலும், நகர் பகுதியில் கொரோனா பணி சுணக்கம் இன்றி நடைபெற ஏதுவாக கீழ்க்கண்ட பொருட்களை ஒப்பந்தப்புள்ளி கோரி வாங்கிக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | லைசால் | – | 500 லிட்டர் |
| 2. | முகவுரை | – | 20,000 எண்ணம் |
| 3. | கையுறை | – | 20,000 எண்ணம் |

இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.1.50 இலட்சம் ஆகும்.

அலுவலக குறிப்பு. ஒப்பந்தப்புள்ளி மூலம் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1058, நாள். 30.06.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

12) இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணி மற்றும் கொரோனா தடுப்பு பணிக்கு தேவையான கீழ்க்கண்ட கிருமி நாசினிகள் இருப்பு குறைவாக உள்ளது. மேலும், தற்போது தென் மேற்கு பருவமழை துவங்கியுள்ள நிலையில் நகர் பகுதியில் தினசரி கிருமி நாசினி தெளிக்க வேண்டியுள்ளதால் கீழ்க்கண்ட கிருமி நாசினிகளை ஒப்பந்தப்புள்ளி கோரி வாங்கிக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | நீர்த்த சுண்ணாம்பு | – | 30000 கிலோ |
| 2. | பிளிச்சிங பவுடர் | – | 10000 கிலோ |

இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 9.75 இலட்சம் ஆகும்.

அலுவலக குறிப்பு. ஒப்பந்தப்புள்ளி மூலம் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1059, நாள். 30.06.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

13) கொடைக்கானல் நகராட்சி அலுவலக கணணிகளுக்கு Antivirus, Modem, Mouse & OS அவசர அவசியம் இந்நகராட்சி உதவி கணணி அமைப்பாளர் திரு எம்.கே. வேல்முருகன் அவர்களால் உள்ளூர் கணணி நிறுவனமான itekinsys மூலம் செய்து முடிக்கப்பட்ட வகையில் பட்டியல் தொகை ரூ. 5400/– வழுங்கிட கோரி பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே, பட்டியலின்படி தொகை ரூ. 5400/– யை பொது நிதியன் மூலம் வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1060, நாள். 30.06.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

14) கொடைக்கானல் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள RICOH ஜெராக்ஸ் இயந்திரம் இதுவரை 1,00,000 மேல் நகல் எடுக்கப்பட்டு தற்போது இயந்திரத்தின் Drum தேய்மானம் அடைந்துள்ளது. எனவே, இந்த இயந்திரம் வாங்கிய RICOH ஜெராக்ஸ் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான Tirupathi Office Products, மதுரையின் மூலம் ஜெராக்ஸ் இயந்திரத்தின் Drum மற்றும் பழுது பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 11,500/– ஆகும்.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 1061, நாள். 30.06.2021. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

15) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான மாவட்ட ஆட்சித் தலைவர் தங்கும் பார்க் வியு பஙகா கட்டிடத்தின் உள் அறைகளில் அலஙகார பணிகள், வயரிங, False Ceiling மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு ரூ. 9.95 இலட்சத்தில் ( ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணித்து ஐந்தாயிரம் மட்டும் ) பொது நிதியின் கீழ் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டின்படி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 1062, நாள். 30.06.2021 |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

16) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான அலுவலக கட்டிடத்தில் அமைந்துள்ள பழனி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அலுவலக கட்டிடம் மழையின் காரணமாக சேதமடைந்து பழுதடைந்துள்ளது. எனவே, மேற்படி கட்டிடத்தினை மராமத்து செய்து புதுப்பிப்பதற்கு ரூ.9.80 இலட்சத்தில் (ரூபாய் ஒன்பது இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) பொது நிதியின் கீழ் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டின்படி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 1063, நாள். 30.06.2021. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

ஒம்/–த.நாராயணன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.